**புத்தளம் மாவட்டத்தின் 18 கமநல சேவைக் குழுக்ம் - 2022**

---

## 1. அபிப்பிராயம்

புத்தளம் மாவட்டத்தின் 18 கமநல சேவைக் குழுக்களின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் 58(1) ஆம் பிரிவு என்பவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2** 2023 யூன் 15 ஆம் திகதி வரையில் 2022 ஆம் ஆண்டிற்குரிய புத்தளம் மாவட்டத்தில் 18 கமநல சேவைக் குழுக்களுக்குரிய கணக்காய்வு அறிக்கை விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் அந்த அறிக்கைகளில் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வெளியிடப்பட்டிருந்தது. முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வெளியிடுவதற்கான காரணங்களாக இருந்த பொருண்மையான குறைபாடுகள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 1.3 நிதிக்கூற்றுக்கள்

### 1.3.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களில் உள்ளடங்கியுள்ள கணக்கீட்டு கொள்கைகளுடன் இணங்காமை.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கமநல வங்கி கமநல சேவை குழுக்களின் அலகொன்றாக இருந்தமையால் கமநல வங்கிக்குரிய சகல கணக்குகளும் கமநல சேவை குழுக்களின் வருடாந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடக்கப்பட்டு ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்க வேண்டியிருந்த போதும் 18 கமநல சேவை குழுக்களும் அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றோம். | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் 2012 பெப்ரவரி 29 ஆம் திகதிய இலக்கம் 4/2012 என்ற சுற்றிக்கை 5.6(i) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 18 கமநல சேவைக் குழுக்களின் காணி 23 ஏக்கர், 12 பழைய மற்றும் புதிய களஞ்சியங்கள், 10 அலுவலகக் கட்டிடங்கள், 5 உத்தியோகபூர்வ விடுதிகள், தாவரக்கூடம் மற்றும் கிணறுகள் பெறுமதி என்பன மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். 18 செயற்குழுக்களில் 12 இனது காணிகள் தற்போது கமநல அபிவிருத்தி திணைக்களத்திற்கு கையளிக்கப்படாதிருந்தமையால் பெறுமதிகளை மதிப்பிட்டு கணக்கீடு செய்வதற்கு முடியாதிருந்தது. அந்தக் காணிகளைக் கையேற்கும் நடவடிக்கைகள் மேற்காள்ளப்படுகின்றது என தயவுடன் அறியத்தருகின்றோம். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 03 கமநல சேவை குழுக்கள் காலநிலை மாற்ற நீர்ப்பாசன செயற்திட்டத்தின் கீழ் 2022 ஆம் ஆண்டின் போது கமநல சேவைகள் நிலையத்திற்கு கிடைத்திருந்த 08 அறுவடை இயந்திரங்கள், வேளாண்மை நாட்டுகின்ற 09 இயந்திரங்கள், நாற்று நெல் விசிறும் 04 இயந்திரங்கள், தொலைக்காட்சி மற்றும் மடி கணனிகள் இரண்டின் பெறுமதி மற்றும் 02 கமநல சேவைக் குழுக்களுக்கு கிடைத்த 02 கணனி இயந்திரங்கள், 72 பிளாஸ்ரிக் கதிரைகள், 02 காப்பகங்கள், நீர்வடிகட்டி மற்றும் 02 இணையத்தள கெமரா என்பவற்றின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். இந்த உபரணங்களின் இருப்பு CSIAP செயற்திட்டத்தின் மூலம் கமநல சேவைகள் நிலையத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. இந்த செயற் திட்ட அலுவலகத்திலிருந்து பெறுமதிகளைப் பெற்று கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத்தருகின்றோம். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 10 கமநல சேவை குழுக்களின் கணக்குகளில் 25 விடயங்களுக்குரிய நிதிக் கூற்றுக்கள் மற்றும் நேரொத்த அறிக்கைகளுக்கிடையிலான மீதிகளில் கூட்டுமொத்தமாக ரூபா 71,684,553 இணக்கமின்மை காணப்பட்டது. | ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்வரும் ஆண்டின் கணக்கு அறிக்கைகளை தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்குகள் இணங்காமையினை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.3.4 அதிகார பலம் இன்றிய கொடுக்கல் வாங்கல்கள்.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 06 கமநல சேவைக் குழுக்களில் ரூபா 89,495,858 பெறுமதியான 137 நாட்குறிப்புக்களுக்காக முறையான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். இதன் பின்னர் முறையான அங்கீகாரத்துடன் நாட்குறிப்புக்களை பேணிச் செல்வதற்கு சகல குழுக்குக்களுக்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என தயவுடன் அறியத்தருகின்றோம். | முறையான அங்கீகாரத்துடன் நாட்குறிப்புக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

### 1.3.5 கணக்காய்விற்கான எழுத்து மூல சான்றுகள் இன்மை.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அட்டவணைகள், மதிப்பீட்டு அறிக்கை மீதி உறுதிப்படுத்தல் சான்றிதழ், கடன் பதிவேடு, நிலையான சொத்துப் பதிவேடு, உரித்துறுதி சான்றிதழ் மற்றும் கடன்கொடுத்தோர் காலப்பகுப்பாய்வு போன்ற சான்றுகள் காணப்படாமையின் காரணமாக 18 கமநல சேவைக் குழுக்களில் ரூபா 122,220,794 பெறுமதியான கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். விரிவான குறிப்புக்கள், மதிப்பீட்டு அறிக்கை, மீதி உறுதிப்படுத்தல் சான்றுதழ், கடன் பதிவேடு, நிலையான சொத்துப் பதிவேடு, உரித்துறுதி சான்றிதழ் என்பன சரியாக தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு உரிய சான்றுகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டம் | | | |
| (i) | 22 ஆம் பிரிவு | 17 கமநல சேவைக் குழுக்களின் விவசாய கொள்கைகளுக்கு இணங்க பிரதேசத்தின் விவசாயக் காணிகளினை விட பொருத்தமான காணிகளுக்கு மிகவும் பொருத்தமான பயிர்கள் மற்றும் வளர்க்கக்கூடிய உயிரினங்கள் என்ன என்பதை சரியாக நிர்ணயித்து ஏற்றுக்கொள்ளக் கூடிய வேலைத்திட்டம் ஒன்றை அமுல்படுத்த வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம் . எதிர்வரும் ஆண்டிலிருந்து 22 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 52 ஆம் பிரிவு | 18 கமநல சேவைக் குழுக்களில் சகல போகங்களுக்கும் முன்னர் கமநலக் குழு அதிகாரப் பிரதேசத்திற்காக விவசாய ரீதியிலான நிகழ்ச்சித் திட்டம் தயாரிக்க வேண்டியிருந்த போதிலும் குழுக்கள் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம் . எதிர்வரும் போகத்தில் விவசாய நிகழ்ச்சித் திட்டத்தை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | 53(4) ஆம் பிரிவு | ஒவ்வொரு 03 வருடங்களுக்கு ஒரு தடவையும் விவசாய காணிகளின் பெயர் | ஏற்றுக்கொள்கின்றோம் . கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் | 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பதிவேடு மீள்திருத்தம் செய்யப்பட வேண்டியிருந்த போதும் 08 குழுக்கள் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுமென தயவுடன் அறியத்தருகின்றோம். | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை ---------------------- | | | |
| | நிதிப் பிரமாணம் 880 மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய இலக்கம் 01/2020 என்ற அரச நிதிச் சுற்றறிக்கையின் II பகுதியின் 09 ஆம் பிரிவு | காசாக அல்லது இருப்பு தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ள சகல ஊழியர்களும் பிணைவைக்க வேண்டியிருந்த போதும் 18 கமநல சேவைக் குழுக்களில் விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்கள் பிணை வைத்திருக்கவில்லை. | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் 2023.01.23 ஆம் திகதிய 7/2/15/3/3 (vii) ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் விவசாய உதவி உத்தியோகத்தர்கள் பிணை வைப்பதிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர் . | நிதிப் பிரமாணத்தின் 880 இன் பிரகாரம் மற்றும் இலக்கம் 01/2020 என்ற அரச நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கை ---------------------- | | | |
| (i) | 1994 மார்ச் 16 ஆம் திகதிய இலக்கம் 392/94 என்ற சுற்றறிக்கை | கமநல குழுக்களுக்கு ஏனைய நிறுவனங்களிலிருந்து அல்லது நபர்களிடமிருந்து அறவிட வேண்டிய பணம் தாமதமின்றி அறவிட வேண்டியிருந்த போதும் 09 கமநல சேவைக் குழுக்களில் பல வருடங்களில் இருந்து கொண்டுவரப்படுகின்ற ரூபா 5,671,637 மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம் . தற்போது கமநல அபிவிருத்தி ஆணையாளரின் இலக்கம் 7/8/12/11 என்ற 2022.06.01 ஆம் திகதிய அறவிட வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகளை தீர்த்துவைக்கின்ற கடிதத்திற்குரிய தீர்த்தல் வைத்தலின் இயலுமை தீர்த்துவைக்க முடியுமான மீதிகள் | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் அறவிட வேண்டிய பணத்தை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | கனிசமான அளவு தீர்த்துவைக்கப்பட்டிருந்ததுடன் தீர்த்துவைப்பதற்கு முடியாத மீதிகள் ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என தயவுடன் அறியத்தருகின்றோம். | |
| (ii) | 2013 மார்ச் 08 ஆம் திகதி 04/2013 சுற்றறிக்கை | கமநல சேவைகள் நிலையத்தின் வளவினைப் பயன்படுத்தி விவசாய உற்பத்தி விற்பனை, தற்காலிக சிற்றுண்டிச்சாலை நடாத்துதல், விவசாய அமைப்புக்களின் உற்பத்திகளை விற்பனை செய்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும் 12 கமநல சேவைக் குழுக்களால் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம் . எதிர்காலத்தல் அதுதொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும். | 2013 மார்ச் 08 ஆம் திகதிய 04/2013 ஆம் இலக்க சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2022 ஆம் ஆண்டின் 18 கமநல சேவைக் குழுக்களில் கூட்டுமொத்தமாக ரூபா 10,006,805 மிகையும், 18 கமநல வங்கிகளில் கூட்டுமொத்தமாக ரூபா 10,807,301 மிகையும் காணப்பட்டது. 2021 ஆம் ஆண்டில் 18 கமநல சேவைக் குழுக்களில் கூட்டுமொத்தமாக ரூபா 6,584,393 மிகையும், 18 கமநல சேவை வங்கிக் கணக்குகளில் கூட்டுமொத்தமாக ரூபா 8,668,103 மிகையும் காணப்பட்டது.

### 2.1.1 பகுப்பாய்வு ரீதியான மீளாய்வு

i. மீளாய்வாண்டில் 16 கமநல சேவைக் குழுக்களில் ரூபா 10,311,610 மிகை பெறப்பட்டிருந்ததுடன் அனுதனுடன் ஒப்பிடும் போது முன்னைய ஆண்டில் 18 கமநல சேவைக் குழுக்களுக்கு உரித்தான மிகை ரூபா 6,584,393 ஆகும். அதன் பிரகாரம் ரூபா 3,727,217 மிகையில் அதிகரிப்பை காணக்கூடியதாக இருந்தது. மீளாய்வாண்டில் 02 குழுக்களில் பற்றாக்குறை ரூபா 304,805 ஆக இருந்ததுடன் அதனுடன் ஒப்பிடும் போது கடந்த ஆண்டில் எந்தவொரு குழுவிலும் பற்றாக்குறை ஒன்று காணப்படவில்லை. அதன் பிரகாரம் மீளாய்வாண்டில் 02 செயற்குழுக்களில் பற்றாக்குறை மிகையில் அதிகரிப்புடன் சீராக்கியதால் ஒட்டுமொத்த மிகை ரூபா 3,422,412 இனால் அதிகரித்திருந்தது.

ii. கமநல சேவைக் குழுக்களின் அடிப்படை பணிப்பொறுப்பாக பசளை, விவசாய இரசாயனப் பொருட்கள், நாற்றுக்கள் மற்றும் கன்றுகள் மற்றும் விவசாய உபகரணங்களை உள்ளடக்கிய விவசாய ரீதியான பொருட்களை விற்பனை செய்வதாக இருந்ததுடன் மீளாய்வாண்டிற்குரியதாக 18 கமநல சேவைக் குழுக்களில் கூட்டுமொத்தமாக விற்பனை வருமானம் ரூபா 391,152,864 ஆக இருந்தது. மொத்த ஒன்று சேர்க்கப்பட்ட இலாபம் ரூபா 8,335,539 ஆனமையால் அதன் பிரகாரம் ஒரு கமநல சேவைக் குழுவின் வருடாந்த விற்பனை வருமானம் சராசரியாக ரூபா 21,730,715 ஆக இருந்ததுடன் சராசரியான மொத்த இலாபம் ரூபா 463,086 ஆகும்.

iii. சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 18 கமநல சேவைக் குழுக்களின் நிதி நிலைமை தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| | | ------------- |
| திரண்ட நிதியங்களின் பெறுமதி (தேறிய சொத்துக்கள்) | = | 123,118,886 |
| நீண்டகாலக் கடன் பெறுமதி | = | 19,696,873 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | = | 411,190,785 |
| மொத்த சொத்துக்கள் | | |
| • நடைமுறை சொத்தக்கள் | = | 473,003,832 |
| • நடைமுறையல்லாச் சொத்துக்கள். | = | 81,002,712 |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 வைப்புக் கணக்குகள் தொடர்பான தகவல்கள் மற்றும் ஆக்கபூர்வமான முதலீடுகளில் ஈடுபடுத்தாமை.**

2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 18 கமநல சேவைக் குழுக்கள் மற்றும் 18 கமநல வங்கிக் கணக்குகளினால் அரசாங்கத்தின் 02 வணிக வங்கிகளில் பேணிச்செல்லப்படுகின்ற நடைமுறைக் கணக்குகளில் காணப்பட்ட மீதிகள் மற்றும் அரசாங்கத்தின் வங்கிகளில் சேமிப்பு மற்றும் நிலையான வைப்பாக மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | **சேமிப்பு வைப்பு** | **நிலையான வைப்பு** | **நடைமுறைக் கணக்கு** | **மொத்தம்** |
|---|---|---|---|---|
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| குழு | 196,638,019 | 43,228,512 | 185,835,640 | 425,702,171 |
| கமநல வங்கி | 22,535,792 | 7,706,181 | 1,836,509 | 32,078,482 |
| மொத்தம் | 219,173,811 | 50,934,693 | 187,672,149 | |

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| (அ) எந்தவொரு வட்டி வருமானமும் கிடைக்கப்பெறாக நடைமுறைக் கணக்குகளில் காணப்பட்ட | ஏற்றுக்கொள்கின்றோம். மேற்கூறப்பட்ட கணக்குகள் பேணிச் செல்லப்படுகின்ற வங்கி முகாமையாளருடன் கலந்துரையாடி நடைமுறைக் | நிதியத்தை மிகவும் ஆக்கபூர்வமான முதலீட்டு வழிகளில் ஈடுபடுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீதி ரூபா 187,672,149 ஆகும். அதில் கமநல சேவைகள் செயற்குழுக்களின் நடைமுறைக் கணக்கில் காணப்பட்ட மீதி ரூபா 185,835,640 மற்றும் கமநல வங்கி நடைமுறைக் கணக்குகளின் மீதி ரூபா 1,836,509 ஆக இருந்ததுடன் 08 கமநல சேவைகள் செயற்குழுக்களின் நடைமுறைக் கணக்கில் காணப்பட்ட மீதி ரூபா 2,000,000 இனை விஞ்சி இருந்தது. | கணக்கில் ஆகக்குறைந்த மீதியை பேணிச் செல்வதற்கும் மேற்கூறப்பட்ட கணக்குகளில் நிலையான கட்டளையின் பிரகாரம் அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | குறைந்த வட்டி வருமானம் பெறுகின்ற சேமிப்பு வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டுள்ள பணத்தின் கூட்டுமொத்தம் ரூபா 219,173,811 ஆகும். அதன் பிரகாரம் நிதி ஆக்க பூர்வமானதாக ஈடுபடுத்தப்படவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். இந்த ஆண்டில் பசளை விலை வரையறையின்றி அதிகரித்ததன் காரணமாகவும் மற்றும் பசளை உடன் காசுக்கு பெற்றுக்கொள்வதற்கு ஏற்பட்டதன் காரணமாகவும் குழுவில் சேமிப்புக் கணக்கின் அதிக தொகை நிறுத்திவைப்பதற்கு ஏற்பட்டிருந்ததை தயவுடன் அறியத்தருகின்றோம். தற்போது பசளை விலை குறைவடைந்தமையின் காரணமாக கமநல சேவைகள் செயற்குழு சிலவற்றில் மேலதிகமாகக் காணப்பட்ட பணம் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. | நிதியத்தை மிகவும் ஆக்கபூர்வமான முதலீட்டு வழிகளில் ஈடுபடுத்துதல் வேண்டும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னேஸ்வரம் கமநல சேவைக் குழுவின் ப/முங்கந்தழுவ பிரிவில் காணி ஏலவிற்பனைக் கம்பனியால் | ஏற்றுக்கொள்கின்றோம். வழக்குத் தொடர்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்ற என தயவுடன் | சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கூறுகளாக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்ற காணிகளுக்குரிய ஒரு ஏக்கர் அளவிலான வயலில் மண் அகற்றப்பட்டு அனுமதியற்ற வாய்க்கால் அமைத்தல் மற்றும் அகற்றப்பட்ட மண் வயல் வெளியில் போடப்பட்டு மண்ணால் நிரப்பியமை தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு அது தொடர்பான தகவல்கள் சேகரிக்கப்பட்ட போதிலும் சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட் டிருக்கவில்லை. | அறியத்தருகின்றோம். | |
| (ஆ) | 06 கமநல சேவைக் குழுக்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 6,039,149 கடன்கொடுத்தோரை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். தற்போது கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் 2022.06.01 ஆந் திகதிய இலக்கம் 7/8/12/11 என்ற சுற்றறிக்கையில் அறவிட வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகளைத் தீர்த்துவைக்கின்ற கடிதத்திற்கு உரிய தீர்த்து வைக்கக்கூடியதாக உள்ள மீதிகள் கனிசமான அளவு தீர்த்துவைக்கப்பட்டுள்ளதுட ன் தீரத்து வைப்பதற்கு முடியாத மீதிகள் ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என தயவுடன் அறியத்தருகின்றோம். | செலுத்த வேண்டிய கடன் மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் உள்ளவாறு வேளாண்மை செய்யக்கூடிய (A தரம்), ஏனைய போகப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளக்கூடிய (B தரம்) மற்றும் பயிர் செய்ய முடியாத (C தரம்) | ஏற்றுக்கொள்கின்றோம். வெற்றுக் காணிகளில் விளைச்சலின் கீழ் எதிர்காலத்தில் பயிரிடப்படுமென தயவுடன் அறியத்தருகின்றோம். | வெற்றுக் காணிகளை வருடாந்தம் பயிர் செய்வதற்காக பயன்படுத்தும் அளவினை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வெற்றுக்காணிகள் முறையே ஏக்கர் 344,882 மற்றும் 960 ஆக இருந்ததுடன் ஆண்டில் பயிர் செய்வதற்காக சேர்க்கப்பட்டதன் பின்னர் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு நெல் பயிரிடக்கூடிய, ஏனைய போகப் பயிர்களில் பயிர் செய்யக் கூடிய மற்றும் பயிர் செய்ய முடியாத ஏக்கர் 330,877 மற்றும் 960 ஆக காணப்பட்டது. | | |
| (ஈ) | மாதம்பை கமநல சேவைக் குழுவின் 2009 ஆம் ஆண்டின் போது விற்பனைப் பிரிவில் சேவையில் ஈடுபட்டிருந்த விற்பனை ஊழியரினால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 2,110,289 நிதி மோசடி தொடர்பாக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிடுக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். வழக்கு விசாரணையில் காணப்படுகின்றது என தயவுடன் அறியத்தருகின்றோம். | நிதி மோசடிக்குரிய பணத்தை பொறுப்புவாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022/23 பெரும் போகத்திற்காக 18 கமநல சேவைகள் நிலையங்களுக்காக சேதனப் பசளை, சேதனக் கரைசல் மற்றும் உயிரியல் கரைசல் பசளைகள் முறையே மெற்றிக் தொன் 2,924.84, லீற்றர் 47,105.60 மற்றும் லீற்றர் 74,455 வழங்கப்பட்டிருந்தது. இதற்காக 2023 சனவரி 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய தொகையான ரூபா 332,379,603 இல் ரூபா 140,551,870 செலுத்தப்பட்டிருந்தது. சுற்றாடலுக்கு சாதகமான | சேதனப் பசளை உற்பத்தியை பதிவு செய்தல் நியமத்தைப் பரீட்சித்தல் பசளை செயலகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட் டிருந்ததுடன் அந்தக் கம்பனியால் வழங்கப்படுகின்ற பசளை தரத்தை உடையதாக இருந்தமைக்கு இணக்கச் சான்றிதழ் கமநல சேவை குழுக்களுக்கு | சரியான நியமத்துக்கும் உரிய மாதிரிக்கும் இணங்க உரிய வழங்கல்கள் மேற்கொள்ளப்பட்ட மையை உறுதிப்படுத்தல் பெறப்பட்டதன் பின்னர் மாத்திரம் விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்காக பரிந்துரை செய்வதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | சேதனப் பசளை பகிர்ந்தளிக்கும் நிகழ்ச்சித் திட்டத்தில் ஈடுபட்டிருந்த தரப்பினர்களுக்குரிய ஆலோசனைக்கோவையின் 5.5.2.1 மற்றும் 5.5.2.2 இன் பிரகாரம் உயர்ந்த தரத்தினை உடைய பசளைகளை விவசாயிகளுக்கு வழங்குவதற்கு கமநல அபிவிருத்தி திணைக்களம் கண்காணிக்க வேண்டியிருந்த போதும் 07 கமநல சேவை நிலையங்களின் உற்பத்தியாளர் களுக்கு புதிதாக கிடைக்கின்ற பசளை குறித்துரைத்த பசளை இணக்கச் சான்றிதழ் பெறப்பட்டுள்ளமைக்கு கமநல அபிவிருத்தி பிரதேச உத்தியோகத்தர் மற்றும் பகிர்ந்தளிக்கும் சந்தர்ப்பத்தில் விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் அறிந்திருக்க வேண்டியிருந்த போதும் இணக்கச் சான்றிதழில் தகவல்களுடன் பசளை இருப்பு பரீட்சிக்காமல் பசளை இருப்பு பெறப்பட்டிருந்தது. | வழங்கியதன் பின்னர் உரிய கமநல சேவை குழுவினால் பசளை பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருந்ததை தயவுடன் அறியத்தருகின்றோம். | எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டின் போது கமநல அபிவிருத்தி திணைக்களம், மாவட்ட அலுவலகம் என்பவற்றிற்குக் கிடைத்த மண் பரிசோதனைத் தொகுதிகள் மற்றும் பரிசோதனை கட்டங்கள் 17 கமநல சேவைகள் நிலையங்களுக்கு PH பெறுமதி மற்றும் இலத்திரனியல் பெர்களைப் பதிவு செய்வதற்காக வழங்கப்பட்டிருந்த போதிலும் அவற்றின் பெறுமதி மாவட்ட அலுவலகத்திடம் காணப்படாதிருந்ததுடன் அந்தப் பரிசோதனைத் தொகுதிகள் மற்றும் பரிசோதனைக்குரிய கட்டங்கள் இதுவரை விளைவற்றுக் காணப்படுவதுடன் பரிசோதனை நடவடிக்கைகள் யாவும் கலாவதியாகி இருந்தது. | இந்தப் பரிசோதனைத் தொகுதியின் மூலம் பரீட்சிக்கக் கூடிய Ph மற்றும் Ec பெறுமதி மாத்திரம் ஆகும். விவசாயத் திணைக்களத்தின் மூலம் ஸ்தாபிக்கப்பட்ட மண் பரிசோதனை நிலையத்தின் மூலம் மண் மாதிரியின் பரிசோதனைகளின் கனிசமான அளவு மேற்கொள்ளகூடிய முடியுமான மேற்கொள்ள வேண்டியமை மற்றும் முறையான சான்றிதழ் விநியோகித்தலின் காரணமாக கமநல நிலையங்களின் மூலம் | மண் பரிசோதனைத் தொகுதிகள் மற்றும் பரிசோதனைக் கட்டங்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்துவத்றகு பொத்தமான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேலும் 2019 ஆம் ஆண்டின் போது மாவட்ட அலுவலகத்தினால் ரூபா 405,324 பெறுமதியான பரிசோதனைகளின் அளவொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் தற்போது அவையும் காலாவதியாகி இருந்தது. | மண் பரிசோதனை செய்வதற்காக அனுப்புவதற்கு குறைந்த மட்டத்தில் காணப்பட்டமையை தயவுடன் அறியத்தருகின்றோம். | |
| (இ) | நெய்னாமடம் கமநல சேவைக் குழுவின் 2021 நவம்பர் மாதம் விவசாயிகளுக்கு இலவசமாக பகிர்ந்தளிப்பதற்கு கிடைத்த 2021 செப்டெம்பர் உற்பத்தி கிலோ கிராம் 800 KCL பசளை இருப்பில் 2023 ஏப்ரல் மாதம் வரையில் ரூபா 200,400 ஆன பசளை கிலோ கிராம் 417.5 மற்றும் 2020 ஒக்டோபர் மாதம் இலவசமாக பகிர்ந்தளிப்பதற்கு கிலோ கிராம் 800 MOP பசளை இருப்பில் கிலோ கிராம் 429.5 பசளை இருப்பு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டிருக்க வில்லை. | இணங்குகின்றோம். இந்தப் பசளை இருப்பில் KCL பசளை கிலோ கிராம் 417.5 விவசாயிகளுக்கு வழங்குவதற்கு ஆலோசனை வழங்கப்படாதிருந்ததுடன் MOP மூட்டை ஒன்று ரூபா 15,000 வீதம் விற்பனை செய்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | பசளை பகிர்ந்தளிக்கும் செயற்பாடுகள் செயற்திறனாகவும் முறையாகவும் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | மஹகும்புக்கடவல கமநல சேவைக் குழுவிற்கு 2021 யூன் 23 இல் லங்கா உரக் கம்பனியிலிருந்து விவசாயிகளுக்கு இலவசமாக பகிர்ந்தளிப்பதற்காக கிடைத்த ரிஏஎஸ்பி பசளை கிலோ கிராம் 3,600 இருப்பில் கிலோகிராம் 3,078 உம், தனியார் நிறுவனத்திலிருந்து விவசாயிகளுக்கு இலவசமாக பகிர்ந்தளிப்பதற்காக கிடைத்த உயிரியல் கரைசல் பசளை லீற்றர் 266 மற்றும் ஆணமடுவ கமநல சேவைக் குழுவின் 2022 மே 24 ஆம் திகதி எப்பாவெல பொஸ்பேற் கம்பனியிலிருந்து கிடைத்த ERP மானிய பசளை 1,200 மூட்டைகளில் 168 பசளை மூட்டைகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் விவசாயிகளுக்கு | ஏற்றுக் கொள்கின்றோம். இந்த செயற்குழு இரண்டினதும பசளை இருப்பில் இலவசமாக வழங்குவதற்காக விநியோகிக்கப்பட்டிருந்த துடன் அந்த மீதிகளுக்குரிய போகத்தில் விவசாயிகளுக்கு பசளை பகிர்ந்தளிக்கப்பட்டதன் பின்னர் எஞ்சிக் காணப்பட்டிருந்ததுடன் மீண்டும் வழங்குதல் தொடர்பாக ஆலோசனை வழங்காமையின் காரணமாக களஞ்சியங்களில் எஞ்சிக் காணப்பட்டதை | உரிய பசளை இருப்புக்களை காலாவதியாவதற்கு முன்னர் விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தயவுடன் அறியத்தருகின்றோம். |

## 3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்.

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 06 கமநல சேவைக் குழுக்களினால் கமநல சேவை ஆணையாளருக்கு உழவு இயந்திர வாடகையாக செலுத்த வேண்டிய ரூபா 6,445,224 கடன் தொகை நீண்டகாலம் முதல் கொண்டுவரப்படுகின்ற போதும் அவ்வாறான உழவு இயந்திர வண்டி கமநல சேவை செயற்குழுக்களில் பௌதீக ரீதியில் காணப்படவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். இந்த மாவட்டத்தில் இயந்திர உபகரணம் (உழவு இயந்திரம்) 2022 மற்றும் 2023 ஆண்டுகளில் இலங்கை சீனிக் கம்பனிக்கும், தேசிய கடதாசி கூட்டுத்தாபனத்திற்கும் கையளிக்கப்பட்டிருந்தது. மேலும் ஒரு பகுதி ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன் நிலையான சொத்துக்களில் அகற்றி தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உழவு இயந்திர வண்டியின் பௌதீக இருப்பு தொடர்பாக கண்டறிந்து கடன் தொகையைத் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.5 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகணங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 07 கமநல சேவை செயற்குழுக்களில் 08 உழவு இயந்திர வண்டிகளும், 03 செயற்குழுக்களில் 05 நாற்று கொட்டகைகளும் 07 செயற்குழுக்களில் 07 உத்தியோகபூர்வ விடுதிகளும், 06 குழுக்களில் 06 மண் பரிசோதனைக் கூடங்களும், ஒரு செயற்குழுவில் களஞ்சியம் ஒன்றும், 02 குழுக்களில் 02 நிலத் தராசும், 03 குழுக்களில் 04 அருவி வெட்டும் இயந்திரங்களும், 08 குழுக்களில் கூட்ட நிலமும், ஒரு குழுவில் தண்ணீர் மோட்டார் மற்றும் | ஏற்றுக்கொள்கின்றோம் எதிர்வரும் ஆண்டில் செயற்றிறனாகப் பயன்படுத்துவதற்கு மற்றும்/அல்லது பயன்பாட்டிலிருந்து அகற்றக் கூடிய விளைவற்ற சொத்துக்களை உரிய அங்கீகாரத்தின் கீழ் கைதவிர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | விளைவற்ற வளங்களைப் பயன்படுத்துவதற்காக பொருத்தமான நடவடிக்கையை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| குழாய்க் கிணறும் விளைவற்று காணப்பட்டது. | | |
| (ஆ) வனாத்தவில்லு கமநல சேவைக் குழுவில் 2012 ஆம் ஆண்டின் போது கமநல அபிவிருத்திக் குழ நிலத்தில் இஸ்தாபிக்கப்பட்டிருந்த ஒட்டு தாவரக்கூடத்தில் உற்பத்தி நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதி வரையில் செயற்றிறனற்ற நிலயில் காணப்பட்டதுடன் அதில் கிடைக்கின்ற வருமானம் குழுவினால் மேற்கொள்ளப்படுகின்ற செலவினங்கள் வருடாந்தம் தொடர்ச்சியாக உயர்வடைந்து சென்றிருந்தது. 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் குழுவிற்காக ஏற்பட்ட செலவிடப்பட் மீளாய்வாண்டின் செலவினம் ரூபா 219,710 ஆகவும் தொகையினையும் உள்ளடக்கி ஒட்டுமொத்த செலவினம் 2,394,908 ஆக இருந்ததுடன் அது நிதிநிலமைக் கூற்றில் பெறவேண்டிய மீதியாக செளிப்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் குழு நிதியம் , குழுவின் பிரதான செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக செலவிடுவதற்கு காணப்பட்ட இயலுமை உரித்தற்று போயிருந்தது. | இணங்குகின்றோம். எதிர்காலத்தில் மெற்கூறப்பட்ட செயற்றிட்டங்கள் தொடர்பாக விஷேட புலனாய்வை மேற்கொண்டு அதனைப் பேணி செலலுதல் தொடர்பாக தழுர்மானம் எடுக்கப்படும் என அறியத்தகிறோம். | தாவரக்கூடத்தைப் பயன்படுத்துவதற்கு முறையான திட்டமொன்னைற தயாரித்து அதனை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.6 செயற்றிட்டம் அல்லது மூலதன வேலைகளின் தாமதம்.**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| புத்தளம் காநல சேவைக் குழுவில் 2022 ஆம் ஆண்டில் 04 அணைகளுக்குரியதாக மறுசீரமைக்கப்பட்ட 36 விடயங்களும், விவசாய வீதி | ஏற்றுக்கொள்கின்றோம். நாட்டில் காணப்பட்ட கொறோனா தொற்று நோய் நிலைமை மற்றும் பணவீக்கத்தினன் | நீர்ப்பாசன கைத்தொழில் மற்றும் நீர்ப்பாசண மறுசீரமைப்பு நடவடிக்கைகள் |

| | | |
|---|---|---|
| மறுசீரமைப்பில் 37 விடயங்களும், 13 விவசாயக் கிணறுகள் மறுசீரமைப்புக்களும், 05 விவசாயக் கிணறுகள் புதிதாக நிர்மாணித்தலும், நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்ட செயற்திட்டங்களும், மதிப்பீடு செய்யப்பட்ட கூட்டுமொத்தம் ரூபா 5,600,000 ஆன 10 குளங்களும் மறுசீரமைப்பு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அந்த நடவடிக்கைகளும் 2023 மே 23 ஆம் திகதி வரையிலும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | காரணமாக அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான நிதியேற்பாடு ஒதுக்கப்படாதிந்ததுடன் 2023 ஆம் ஆண்டிற்காக நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டுள்ளதுடன் அவை உடன்படிக்கையின் பிரகாரம் வேலைகள் ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | மற்றும் நிர்மாண நடவடிக்கைகளை நாளதுவரையாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.7 பெறுகைகள் முகாமைத்துவம்.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2006 இன் அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 3.4.2(அ) பிரிவிற்கு இணங்காத வகையில் 2022 ஆம் ஆண்டின் போது கூறு விலை கோராமல் பல சந்தர்ப்பங்களின் போது இங்கிணிமிட்டிய கமநல சேவைக் குழுவினால் ரூபா 169,536 ஆன காகிதாதிகள் மற்றும் புத்தளம் கமநல சேவைக் குழுவினால் ரூபா 1,121,000 விற்பனைப் பொருட்கள் மற்றும் டோனர் உள்ளடக்கிய காகிதாதிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | மேற்கூறப்பட்ட வெளிப்படுத்தப்பட்ட வெளிப்பாடுகளின் பிரகாரம் எதிர்காலத்தில் பெறுகை நடவடிக்கைகள் அதிகளவில் பின்வற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென தயவுடன் அறியத்தருகின்றோம். | பெறுகைகள் வழிகாட்டி கோவைகள் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.8 ஏனைய நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்ட வளங்கள்.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 18 கமநல சேவைக் குழுக்களில் 7988 சதுர அடி அலுவலக கட்டிடத்திற்காக ஏனைய நிறுவனங்களுக்கு வருடாந்தம் ரூபா 1,111,759 தொகை அறவிட்டு வழங்கப்பட்டிருந்ததுடன் மாதாந்த வாடகை நீண்ட காலமாக திருத்தப்படாமையின் காரணமாக கமநல சேவைகள் நிலையத்திற்கு பெற்றுக்கொள்வதற்கு இருந்த | ஆணையாளர் நாயகத்தால் விநியோகிக்கப்பட்ட புதிய சுற்றறிக்கை இலக்கம் 9/2015 (திருத்தம் 1) மற்றும் 2023.08.23 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | அறை வாடகையை நாளதுவரையாக திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

### 3.9 மனித வள முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 12 கமநல சேவைக் குழுக்களில் விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் பதவிகள் 152 வெற்றிடமாகக் காணப்பட்டதன் காரணமாக உரிய பிரிவுகளில் ஏக்க வரி அறவிடுதல் மற்றும் விவசாய ரீதியான செயற்திட்டங்கள் சரியான முறையில் அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | ஏற்றுக்கௌ்கின்றோம். உத்தியோகத்தர்களின் வெற்றிடம் காரணமாக இந்த நிலமை உருவாகியிருந்தது. தற்போது சில உத்தியோகத்தர்கள் தமது கடமைகளை தமது பிரிவுக்கு மேலதிகமாக மேலும் இரண்டு பிரிவுகளில் வேலைகளை மேவுகை செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர். | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | தாபன விதிக்கோவையின் III ஆம் அத்தியாயத்தில் 3.8.2 பிரிவின் ஏற்படுகளின் பிரகாரம் திருப்திகரமான சேவைக்கு இடமளிப்பதற்காக பொருத்தமான இடமாற்றல் முறையொன்று ஏற்படுத்த வேண்டியிருந்த போதிலும் 18 கமநல சேவைக் குழுக்களில் நியமிக்கப்பட்ட விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி உத்தியோகத்தர்கள் வருடாந்த இடமாற்றல் கொள்கையின் கீழ் இடமாற்றங்களுக்காக உட்படாமையினால் அந்த சேவை நிலையங்களில் நீண்ட காலமாக சேவையாற்றுகின்றனர். | இடமாற்றம் தற்போது மேற்கொள்ளப்படுவதுடன் உத்தியோகத்தர் வெற்றிடத்தின் காரணமாக பிரச்சினையான நிலைமை உருவாகியிருந்ததை தயவுடன் அறியத்தருகின்றோம். | பொருத்தமான இடமாற்ற முறைமையொன்றை பின்பற்றுதல் வேண்டும். |

### 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும். பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிக்குரியதாக தயாரிக்கப்பட்ட பாதீட்டு | காணப்பட்ட தொற்றுநோயின் நிலமை மற்:றும் விவசாய | மதிப்பீடுகளை சரியாக |

| | | |
|---|---|---|
| மதீப்பீட்டின் பிரகாரம் 18 கமநல சேவைக் குழுகக்ளின் வருமானம் மற்றும் செலவின விடயங்களில் 141 இற்காக 1.3 சதவீதம் முதல் 1123 சதவீத வீச்சிலான முரண்கள் காணப்பட்டது. இதன் காரணமாக கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படுகின்ற பாதீட்டுக் கட்டுப்பாடு ஆக்கபூர்வமான கட்பாட்டுக் கருவியாக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. | மக்கள் முகம்கொடுக்கின்ற பொருளாதார நெருக்கடிகளின் காரணமாக உரியபிரகாரம் வருமான செலவினங்களை தயாரித்தல் மற்றும் அதன்பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் க‛டமாக இருந்ததுடன் எதிர்காலத்தில் அவ்வாறான முரண்களைக் குறைப்பதற்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளது என தயவுடன் அறியத்தருகின்றோம். | தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**5. கமநல வங்கிகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2012 பெப்ரவரி 29 ஆம் திகதிய 04/2012 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் சுற்றறிக்கையின் 3.4.11(i) இன் பிரகாரம் பயிர்ச் செய்கைக் கடன் கையளிக்கும் போது அறவிடப்படுகின்ற இடர் கடன் மேவுகை தவணைப்பணம் மூலம் நிதியமொன்று கட்டியெழுப்பப்பட வேண்டியிருந்ததுடன் அந்த நிதியத்தில் சேகரிக்கப்படுகின்ற பணம் அரசாங்க வங்கியொன்றில் அதிக வட்டியொன்று கிடைக்கும் வகையில் முதலீடு செய்யப்பட வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்ட போதும் 02 கமநல வங்கிகளில் ரூபா 519,581 பெறுமதியான பணம் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். விரைவாக நடவடிக்கை எடுக்கப்படுமென தயவுடன் அறியத்தருகின்றோம். | இடர் கடன் மேவுகை தவணை நிதியம் சுற்றறிக்கையின் பிரகாரம் முதலீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | கமநல வங்கி ஒன்றில் எதாவது மிகை ஒன்று காணப்படுமாயின் அல்லது பணம் தேவையற்ற வகையில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தமை உறுதிப்படுத்தப்படுமாயின் 2012 | மேற்கூறப்பட்ட வெளிப்படுத்தப்பட்டுள்ள சேமிப்புக் கணக்கின் மீதி விவசாயிகளுக்காக கடனாக விநியோகிக்கப்பட | 2012 பெப்ரவரி 29 ஆம் திகதிய இலக்கம் 04/2012 சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | பெப்ரவரி 29 ஆம் திகதிய இலக்கம் 04/2012 என்ற சுற்றறிக்கையின் 4.4.4 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கவேண்டியிருந்த போதும் அதற்கு இணங்காத வகையில் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு 11 கமநல வங்கிகளில் சராசரியாக சேமிப்பு கணக்குகளில் ரூபா 21,140,502 மீதியொன்று காணப்பட்டது. | வேண்டிய பெறுமதியை கவனத்திற் கொண்டு நிலையான வைப்பாக முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத்தருகின்றோம். | எடுத்தல் வேண்டும். |
| (இ) | கமநல அபிவிருத்தி ஆணையாளரின் 2013 யூன் 16 ஆம் திகதிய இலக்கம் 07/12/04/05 என்ற சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டில் கமநல வங்கியின் இலாபத்தில் 80 சதவீத்தில் 30 சதவீதம் கமநல சேவைக் குழு நிதியத்திற்கு செலவு வைக்க வேண்டியிருந்த போதும் 10 கமநல வங்கிகளினால் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | மேலே வெளிப்படுத்தப்பட்டுள்ள சுற்றறிக்கையின் பிரகாரம் விரைவாக நடவடிக்கை எடுக்கப்படுமென தயவுடன் அறியத்தருகின்றோம். | கமநல அபிவிருத்தி ஆணையாளரின் 2013 யூன் 16 ஆம் திகதிய இலக்கம் 07/12/04/05 என்ற சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2012 பெப்ரவரி 29 ஆம் திகதிய 4/2012 என்ற சுற்றறிக்கையின் பிரகாரம் கடனை தீர்த்து வைத்தல் மற்றும் குறித்துரைத்த திகதியில் அவற்றை அறவிடுதல் கமநல வங்கியின் பணிப்பொறுப்பாக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் 14 கமநல வங்கிகளினால் ரூபா 35,692,329 ஆன நிலுவைக் கடன் மீதி தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேலே வெளிப்படுத்தப்பட்ட பிரகாரம் நிலுவைக் கடனை அறிவிடுவதற்கும், அதற்காக சட்டரீதியான நடவடிக்கைகள் பின்பற்றப்படுமென அறியத்தருகின்றோம். | 2012 பெப்ரவரி 29 ஆம் திகதிய 4/2012 என்ற சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நிலுவைக் கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | 11 கமநல வங்கிகளின் கீழ் 595 ''சித்தமு காந்தா'' விவசாய அமைப்புக்கள் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியின் போது அதில் 281 விவசாய அமைப்புக்களும் 07 கமநல வங்கிகளின் கீழ் 1781 முன் சிறுவர் சேமிப்பு வைப்புக்கள் ஆரம்பிக்கப்பட்ட போதும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதில் 1291 உம் செயலிழந்த நிலையில் காணப்பட்டது. | மேலே உள்ள வெளிப்படுத்தப்பட்டுள்ள மீதிகளை செயற்படு நிலைக்கு கொண்டுவருவதற்காக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுமென தயவுடன் அறியத்தருகின்றோம். | விவசாய அமைப்புக்களை வலுப்படுத்துவதற்கும் செயற்பாட்டு நிலைக்கு கொண்டுவருவதற்கும் விவசாய வங்கிகள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |